

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் 2025–2026 ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) தலைமைச் செயலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி 2025–2026 ஆம் ஆண்டிற்கான உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை இயக்குநர் திருமதி சீமா அகர்வால், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் அ. சண்முகசுந்தரம், குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) தலைமைச் செயலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி 2025–2026 ஆம் ஆண்டிற்கான உணவுப் பொருள் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.4.2025) தலைமைச் செயலகத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர்கள் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக சந்தித்துப் பேசினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.மாரிமுத்து, ராமச்சந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புக்கு காரணமான முதல்வரை பாராட்டும் வகையில்

# தி.மு.க. சட்டத்துறையினர் நீதிமன்றங்களில் இனிப்புகள் வழங்கி கொண்டாடிடுவீர்!

## சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ அறிக்கை!

சென்னை, ஏப். 10 –

அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டு வந்த ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ரவி அவர்களின் செயல்பாட்டினை எதிர்த்து கழக அரசு தொடர்ந்த வழக்கில், உச்ச நீதிமன்றம் அளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை பெற்றுத் தந்த "திராவிட மாடல்" ஆட்சி நடத்தி வரும் முதல்வர் – கழகத் தலைவர் அவர்களை பாராட்டும் வகையில் தி.மு.க. சட்டத்துறைச் சார்பில் தத்தமது பகுதியில் உள்ள நீதிமன்றங்களில் பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடிடுக என்று தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்கள், "எல்லோருக்கும் எல்லாம்" என்ற தாரக மந்திரத்துடன் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருவதை சகித்துக் கொள்ள முடியாத – பொறுத்துக் கொள்ள முடியாத பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு, கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசை தொடர்ந்து சொல்லாலும் – செயலாலும் வஞ்சித்து வரும் நிலையில், சென்னை, பாரதியார் உள்ளிட்ட பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் பதவி காலம் நிறைவடைந்ததை அடுத்து, புதிய துணைவேந்தர்களை நியமிப்பதற்கான தேடுதல் குழுவை 2023ல் கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான கழக அரசு அமைத்திருந்தது. அந்த குழுவில் பல்கலை மானிய குழு(UGC)வின் உறுப்பினரையும் சேர்க்க வேண்டும் என அரசுக்கு, ஆளுநர் ரவி அறிவுறுத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முடிவினை, நியமனம் செய்யப்பட்ட ஆளுநர் மாற்றிட முயற்சித்தார்.

அது முதலே கழக அரசு சட்டசபையில் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் தாமதம் செய்து வந்தார் ஒன்றிய பாசிச பாஜக அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் ரவி. அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்படும் ஆளுநர் ரவி அவர்களின் செயலுக்கு எதிராக கழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தது. உச்சநீதிமன்றத்தில் மாண்பமை நீதியரசர்கள் பர்திவாலா, மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த வழக்கை விசாரித்து வந்து, அனைத்து தரப்பு விசாரணையும் முடிவடைந்தது.

இந்த வழக்கில், நேற்று (8.4.2025) உச்சநீதிமன்ற மாண்பமை நீதியரசர்கள் பர்திவாலா, மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு "மசோதாக்கள் ஒப்புதல் அளிப்பது குறித்து கவர்னர் ஒரு மாதத்தில் முடிவு எடுக்க வேண்டும்" எனவும், "தமிழக கவர்னரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்தும்" தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கழக அரசு தொடர்ந்து வழக்கில், நேற்று உச்சநீதிமன்றம் அளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தீர்ப்பு, தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களுக்கு மாபெரும் வெற்றியை தேடித் தந்துள்ளது.

மக்களுக்காக மக்களுக்கான அரசாக அல்லும் பகலும் தமிழ்நாட்டு மக்களின் நலம் பற்றி மட்டுமே சிந்தித்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி 'ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்" என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் தத்துவக் கோட்பாட்டின்படி "திராவிட மாடல்" ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் அயராத உழைப்பிற்கு கிடைத்த – இந்தியாவிற்கே வழிகாட்டியாக கிடைத்த இம்மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்த முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களை, தி.மு.க. வழக்கறிஞர் அணி மனதார பாராட்டி மகிழ்கிறது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் நீதிமன்ற வாயில்களில் முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் கழக அரசிற்கு கிடைத்த வெற்றியை கொண்டாடும் வகையில், பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும். இவ்வெற்றி விழா நிகழ்ச்சியினை படத்துடன் சமூக வலைதளங்கள் மற்றும் பத்திரிகைகளில் வெளியிட வேண்டுமென தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### உச்ச நீதிமன்றம் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒப்புதல் வழங்கியதால்

# தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களை இனி ஆளுநருக்கு அனுப்ப வேண்டியதில்லை!

## தமிழ்நாடு அரசுத் தரப்பு மூத்த வழக்கறிஞர் ராகேஷ் திவேதி பேட்டி!

**புதுடெல்லி, ஏப். 10 –**

**தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களுக்கும் உச்ச நீதிமன்றம் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒப்புதல் அளித்துள்ளதால், இம்மசோதாக்களை மீண்டும் ஆளுநருக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை என்று தமிழ்நாடு அரசுத் தரப்பு மூத்த வழக்கறிஞர் ராகேஷ் திவேதி தெரிவித்துள்ளார்.**



தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி நிறுத்தி வைத்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தது சட்ட விரோதம் என்றும் ஆளுநரின் இந்த நடவடிக்கைகளை ரத்து செய்வதாகவும் உச்சநீதிமன்றம் அதிரடியாக தீர்ப்பளித் துள்ளது.

ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள் நேர்மையானதாக இல்லை; அரசியல் அமைப்பின் நோக்கத்துக்கு விரோதமாக இருக்கிறது என்றும் உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு தரப்பு மூத்த வழக்கறிஞர் ராகேஷ் திவேதி அளித்த பேட்டி வருமாறு: –

உச்சநீதிமன்ற தீர்ப்பு அனைத்து மாநில ஆளுநர்களுக்கும் பொருந்தும்.

142வது சட்டப்பிரிவின் கீழ் தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி 10 மசோதாக்களுக்கும் உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த மசோதாக்களை இனி மீண்டும் ஆளுநருக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

ஏனென்றால் உச்சநீதிமன்றத்தின் ஒப்புதலையடுத்து இந்த மசோதாக்கள் சட்டமாகியுள்ளன.

அரசியல் சாசனத்தின்படி ஆளுநர் கண்ணியத்துடன் நடந்து கொள்ள நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

மாநில அரசின் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டியது ஆளுநரின் கடமை என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஆளுநர் என்பவர் ஒரு மாநில அரசுக்கு ஆலோசகராக மட்டுமே இருக்க முடியும் என்பதை தீர்ப்பு தெளிவுப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடுகள் நியாயமானதாக இல்லை என்பதோடு சட்ட விரோதமாக உள்ளது என்பதை நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். அவரது நடவடிக்கைகள் விதிகளுக்கு முரணாக உள்ளது. மாநில அரசுகளுக்கு வீண் தடைகளை ஏற்படுத்தக் கூடாது.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

